உலகு 1 ஜுலை 2007 பணிமடல் 5

சீடு டிரஸ்ட் குழந்தைகள் வழங்கும் தனிச்சுற்று மாத இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

நன்கொடை விலை ரூ. 2/-




- M.மதுபதி, XI

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரைக்
கூடி கிழப்பருவமெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

- மகாகவி பாரதி

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் – சீடு டிரஸ்ட் வழிகாட்டலால் 15 வயது முதல் 17 வயது நிரம்பிய குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் நடத்தப்படுகின்றது.

# குழந்தைகளே குழந்தைகளுக்காக...



**சீடு டிரஸ்ட் குழந்தைகளே குழந்தைகளுக்காக நடத்தும் நிகழ்வுகள்**

## செந்தமிழ் நூலகம்

செந்தமிழ் நூலகம் P.பாண்டியராஜன், M. தங்கலெட்சுமி என்ற இருவர் குழுவின் பொறுப்பில் இயங்குகிறது. கல்வி வழிகாட்டல், தகவல்கள் வழங்குதல், வாசிப்பை மேன்மையாக்குதல், படைப்புகள் உருவாக தளம் அமைத்துக் கொடுத்தல் போன்றவற்றை நோக்கங்களாக கொண்ட செந்தமிழ் நூலகம் தற்சமயம் எளிய வாசிப்பு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

## தேன்கூடு குழந்தைகள் வங்கி

தேன்கூடு குழந்தைகள் தரும் சிறுசிறு தொகைகளை சேர்த்து வைக்கும் அமைப்பாகும். S.சுல்தான், N. நாகலெட்சுமி, M. மருதுபாண்டி, K. அழகிரி என்ற நால்வர் குழு குழந்தைகளின் சிறுசேமிப்பை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

### ஜுன் மாதம் சீடு தேன்கூடு ஜுன் மாத இலக்கு ரூ.2820

சீடு தேன்கூடு சந்தாதாரர்களின் எண்ணிக்கை - 93 சேமிப்புத் தொகை - ரூ. 1354

| | | |
|---|---|---|
| வாண்டுகள் அரங்கம் | 1-4ஆம் வகுப்புகள் | ரூ. 461 |
| வேர்கள் அரங்கம் | 5-8ஆம் வகுப்புகள் | ரூ. 547 |
| கனவுகள் அரங்கம் | 9-12ஆம் வகுப்புகள் | ரூ. 346 |



## வான்முகில் கலைகுழு

வான்முகில் குழந்தைகளின் நுண் மற்றும் நிகழ் கலைகளை வெளிப்படுத்தவும் புதிய முயற்சிகளில் ஈடுபட வாய்ப்புகளை வழங்கவும் வான்முகில் கலைகுழு இயங்குகிறது. குழந்தைகள் தங்கள் ஓய்வு நேரங்களை அர்த்தமுள்ள நேரங்களாக்க ஒரு அமைப்பாக ஒன்றுகூடி இயங்கி வருகிறார்கள். ஆர்.பாஸ்கர்ராஜாவும், பி.மணிகண்டனும் குழந்தைகள் பொறுப்பாளர்களாக இயங்கி வருகின்றனர்.

## புதுயுகம் தனிச்சுற்று இதழ்

புதுயுகம் தனிச்சுற்று இதழ் வெற்றிகரமாய் ஐந்தாவது அச்சு இதழை குழந்தைகள் C.T. அருண்குமார், மற்றும் C.K.கற்பகஜோதி என்ற இருவர் குழு உதவியோடு வெளியாகிறது. 150 குழந்தைகள் மாத சந்தாதாரர்களும் உள்ளனர் என்பது மகிழ்ச்சியான செய்தி.

## குழந்தைகள் பேரவை

எல்லோருக்கும் குழந்தைகள் உரிமை குறித்த விழிப்புணர்வு, ஜனநாயகம் குறித்த அறிவு, பிறருக்கு உதவுதல், தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு, கூட்டு முடிவு , தலைமைத்துவ பயிற்சி பெறல், சங்க முன்னேற்றத்தில் தங்களின் பங்கு என்றளவில் இயங்கும், இந்த குழந்தைகள் இயக்கம் தனது உறுப்பினர்களாக தற்போது 93 குழந்தைகளைக் கொண்டுள்ளது. இதில் குழந்தைகள் மிக ஆர்வமாக ரூ.3 சந்தாவாக செலுத்தி உறுப்பினர்களாகி வருவது குறிப்பிடத்தக்கது. எம்.மகுடபதி, ஆர்.ராசிக், பி.சரவணகுமார் போன்றோர் குழந்தைகள் பொறுப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

# காலம் கைகூடட்டும்

சீடு அறக்கட்டளை நடத்தும் படைப்பரங்க வகுப்புகளில் மாதந்தோறும் புதுயுகம் மாத இதழுக்கு கூட்டு முயற்சியாக படைப்புகளில் குழந்தைகள் ஈடுபடுதல் வழக்கம். இக்கல்வியாண்டின் தொடக்க மாதமாதலால் குழந்தைகளின் சேர்க்கை எண்ணிக்கை அதிகமாக இருந்தது. ஒரு வகையில் மகிழ்வுடன் இருந்த சீடு டிரஸ்ட் வாண்டுகள், வேர்கள் அரங்க ஆசிரிய தொண்டர்கள் படைப்பரங்க படைப்புகளை இதழில் வெளியிடுவதற்கான தேர்வு செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தபோது பெருத்த அதிர்ச்சி ஏற்பட்டது.

- வாண்டுகள், வேர்கள் அரங்க குழந்தைகளில் 80% பேர் வெறும் தாளை திருப்பி தந்தவர்கள்.
- அர்த்தமற்ற சொற்களை எழுதியிருந்தவர்கள்.
- எழுத்து, சொல், பொருட் பிழைகளுடன் எழுதியிருந்தவர்கள்.
- ஓரளவு பிழைகளுடன் எழுதியிருந்தவர்கள்.
- சிறப்பான வார்த்தை அமைப்புடன் எழுதியிருந்தவர்கள் என்ற வகைகளில் குழந்தைகள் காணப்பட்டனர்.

கற்பனை திறனும், படைப்பு திறனும் நிறைந்த குழந்தைகளிடம் பணி செய்வது சுகமான எளிதான பணி. அதே நோக்கில் கற்றல் திறன் வேகம் குறைந்த குழந்தைகளிடம் பணி செய்வது மிக கடினமான பணி. Seed Trust அரங்கங்களுக்கு வருகை தரும் குழந்தைகளுக்கு அடிப்படையான தமிழ், ஆங்கில, கணித அறிவினை பல்வேறு வகைமைகளில் கற்பித்து பணியாற்றிட வேண்டியுள்ளது. கரும்பாலை போன்ற எண்ணற்ற பகுதிகளில் ஆரம்பக் கல்வி நிலைமை மேற்கண்டவாறுதான் உள்ளது. இந்நிலைமை இந்தியாவில் பல இடங்களில் நிறைந்திருக்கிறது என்பது தெளிவு.

ஆரம்ப கல்விக்கு எண்ணற்ற முயற்சிகள், அரசாங்க தரப்பிலே மிகச்சிறப்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. அதனை நாமறிவோம். ஆனாலும் அவை விழலுக்கு இறைத்த நீர் போல மாறி வருகிறது. நகர்புற நெருக்கடிகளில் ஒதுக்குபுறமாய் வாழ்ந்து வரும் நம் பெற்றோருக்கு கல்வியின் அவசியம் புரியாததாகும். புரிந்து கொண்டவர்களில் வழிகாட்ட திணறுவோரும் உண்டு. அடிப்படை கல்வியின் தேவை, அதனை குறித்து நாம் தகவல் திரட்டியும், தக்க உதவிகள் கொண்டும் ஆற்றல் சார்ந்த குழந்தைகளை உருவாக்கிடும் பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. இப்பணிகளில் ஈடுபடுவோருக்கும் நம் போன்ற களப்பணியாளர்களுக்கும் நாம் வாழ்த்துக்கள் சொல்லிடுவோம். தக்க ஆதரவு தந்திடுவோம்.


*சீடு நற்பணிகளில்*
*அ.ச. கார்த்திக் பாரதி*

- *சீடு அறக்கட்டளை 2007ஆம் ஆண்டு துவக்கத்தில் +1 மாணவர்கள் 10 பேருக்கும் +2 மாணவர்கள் 10 பேருக்கும் கல்வி உதவித் தொகைகள், சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. 3 பேருக்கு சைக்கிள் வழங்கப்பட்டது.*
- *10 கல்லூரி மாணவர்களுக்கு உயர் கல்வி வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.*
- *2 கல்லூரி மாணவர்களுக்கு கல்வி கட்டணம் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *12 இளைஞர்கள் சீடு முழுமைத்துவ கல்வி அரங்காங்களுக்கு தொண்டர்களாக செயலாற்றி வருகின்றனர்.*
- *சீடு முழுமைத்துவ கல்வி மையங்களுக்கான*
  *வாண்டுகள் அரங்கத்தில் 41 + 38*
  *வேர்கள் அரங்கத்தில் 42 + 16*
  *கனவுகள் அரங்கத்தில் 35 + 7*
  *மொத்தம் 179 குழந்தைகளும் பயனாளிகளாக பதிவு பெற்றுள்ளனர். தேடல் அரங்கத்தில் 11 கல்லூரி மாணவர்களும், தேடல் இளைஞர் பேரவையில் 20 இளைஞர்களும் இணைந்துள்ளது மகிழ்ச்சிகரமான செய்தி.*

# விளையாடி மகிழ்க....

## ஊதப்பா ஊது


இந்த விளையாட்டுக்குத் தேவை ஒவ்வொருவருக்கும் பதினைந்து அடி நீளமுள்ள ஒரு ட்வைன் நூலும், ஒரு காகித டம்ளரும், முதலில் காகித டம்ளரின் அடிப்பாகத்தில், மையத்தில் ஒரு துளை இடுங்கள். ட்வைன் நூல், தாராளமாக நுழைவது மாதிரி அந்தத் துளை அமைய வேண்டும். டம்ளருக்குள் நூலைச் செலுத்தவும். பிறகு, இரண்டு மரங்களை அதாவது ஜன்னல் கம்பிகளை இணைக்குமாறு நூலைக் கட்டவும். இப்போது டம்ளரை ஒரு ஓரத்துக்குக் கொண்டு வாருங்கள். வாயால் காற்றை ஊதியே டம்ளரை ஒரு கோடியில் இருந்து மறு கோடிக்கு நகர்த்த வேண்டும்.



யார் முதலில் டம்ளரை மறு கோடிக்கு கொண்டு சேர்க்கிறார் என்று பாருங்கள். கொண்டு சேர்க்கிறவர்க்கு உடனே பாராட்டைத் தெரிவியுங்கள்.

## அந்த வார்த்தை...

## எந்த வார்த்தை...



'எந்த வயசுச் சுட்டியானாலும் கலந்து கொள்ளக்கூடிய போட்டி இது. ஒரு வார்த்தையைத் துண்டுச் சீட்டில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். பிறகு அதன் முதல் எழுத்தை மட்டும் உங்களைச் சுற்றி உட்கார்ந்திருப்பவர்களிடம் சொல்லுங்கள் உதாரணமாக, பரிசு என்கிற வார்த்தையை நீங்கள் எழுதிருந்தால்'ப' என்று மட்டும் சொல்ல வேண்டும். மற்றவர்கள் வரிசையாக 'ப' எழுத்தில் தொடங்கும் வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே வருவார்கள். பசு, பந்தயம், பண்டிகை பல்...இப்படி..இதில் பரிசு என்பதைச் சரியாக சொன்னவருக்கு ஒரு மதிப்பெண். இப்போது அடுத்த வார்த்தை. அதன் முதல் எழுத்து. இப்படியே தொடரும் விளையாட்டில் யார் முதலில் பத்து மதிப்பெண்கள் பெறுகிறாரோ அவர்தான் வென்றவர்.

# கதைகளின் கதை

கதை என்றாலே சுவாராசியம் ! உற்சாகம் ! பரபரப்பு ! அலுப்பும் பறந்து போகிறது ! கதை கேட்பதும், சொல்வதும் யாருக்குத்தான் பிடிக்காது?

நாம் கேட்ட, சொன்ன கதைகள் தான் எத்தனை எத்தனை ! கணக்கிட முடியுமா என்ன? மரங்கள், பூக்கள், விலங்குகள், கதைகள், ராஜாராணி கதைகள், புராணக் கதைகள், மாயமந்திரக்கதைகள், வரலாற்றுக் கதைகள், சிரிப்புக் கதைகள், அறிவுக் கதைகள், பாட்டி, தாத்தா கதைகள்... என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது அல்லவா?



இந்தக் கதைகள் எல்லாம் எங்கிருந்துதான் வந்து கொண்டு இருக்கின்றன? ஆப்பிரிக்காவில் இதைப் பற்றி ஒரு கதையே இருக்கிறது. இதோ அந்தக் கதை.

முன்னொரு காலத்தில் ஒரு சிறு சுண்டெலி இருந்தது. அது இங்கும் அங்கும் சுற்றித் திரியும். பணக்காரரின் மாளிகை, ஏழையின் குடிசை என்று எல்லா வீட்டிலும் துறுதுறுவென்று ஓடும்.

சுவரில் உள்ள சிறு பொந்தில் ஒளிந்து கொள்ளும். தான் கேட்கும், பார்க்கும் கதைகளை எல்லாம் ஒன்று விடாமல் சேகரித்து வைக்கும்.

சுண்டெலிக்கு இந்தக் கதைகள் மீது அபாரப் பிரியம். கதைகளை பத்திரமாக மரத்தடியில் உள்ள ஒரு குழியில் மறைத்து வைக்கும். இதையெல்லாம் ஒரு நரி பார்த்துக் கொண்டே இருந்தது.

ஒருநாள் நரி கதைகள் இருந்த குழியைத் தோண்டியது. ஐயோ! கதைகள் பயந்து நடுங்கின. அவை குழியில் இருந்து எல்லாத் திசைகளிலும் ஓடத் தொடங்கின. அன்று ஓடத் தொடங்கிய கதைகள் இன்றும் ஓடிக் கொண்டே இருக்கின்றன. உலகம் முழுவதும் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன.

உன்னிடமும், என்னிடமும் கூட ஓடி வருகின்றன. சிறுசிறு மாற்றங்களுடன் நம்மிடம் இருந்து நமது நண்பர்களிடம் ஓடுகின்றன. அவர்களிடமிருந்து, அவர்கள் உறவினர்கள், நண்பர்களிடம் ஓடுகின்றன.


இப்படியே கதைகள் காலம் காலமாகத் தொடர்ந்து ஓடிக் கொண்டே இருக்கின்றன. இப்போது உங்களிடம் கூட ஒரு கதை வந்து சேர்ந்திருக்கும் தானே!.

---


## வாண்டுகள் கைவண்ணம்



ஆர்.வினோதினி
3ஆம் வகுப்பு



வி.டேவிட்ராஜ்
4ஆம் வகுப்பு



ஆர். சுப்பிரமணி
3ஆம் வகுப்பு



3ஆம் வகுப்பு
ச.நமச்சிவாயத்தின்
வீட்டு பொம்மைகள்

# மேரியின் மகிழ்ச்சி

மேரியின் கையில் ஒருதாள். அதில் ஒரு படம். 'அட ! இது என்ன? படமா? எங்கே காட்டு பார்க்கலாம்! என்றாள் தீபா.

மேரியின் கண்ணில் கண்ணீர் ! திடுக்கிட்டாள் தீபா. ''ஏன் அழுகிறாய்'' ? என்று கேட்டாள்.

''நான் உன் வீட்டுத் தோட்டத்தை வரைந்தேன். ஆனால் ரகு அதைப் பார்த்துச் சிரிக்கிறான். நன்றாக இல்லை என்று கேலி செய்கிறான். நான் இனிமேல் படம் வரையப் போவதே இல்லை''. என்று விசும்பினாள் மேரி.

''நன்றாக இல்லையா? அழகாகத்தான் வரைந்திருக்கிறாய். நாம் எல்லோரும் வெவ்வேறு வகையாகப் பார்க்கிறோம். சிந்திக்கிறோம். அவரவர் விருப்பம் போல வரைகிறோம். எல்லோரும் ஒரே மாதிரியாக வரையத் தேவையில்லை. நீ அழாதே''! என்றாள் தீபா. மேரிக்கு அது ஆறுதலாக இருந்தது.



மறுவாரம் தீபாவின் வீட்டுக்கு அவளது உறவினர் வந்திருந்தனர். அவர்களுடன் தீபா, மேரி இருவரும் கடற்கரைக்குச் சென்றனர். தீபா வண்ணப் பென்சில்களும், காகிதங்களும் கொண்டு வந்திருந்தாள்.

கடற்கரையில் சில மீனவர்கள் ஒரு படகைப் பார்த்துக் கொண்டிருந்தனர். எதிரே சிலர் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்தபடி எல்லோரும் படம் வரைய ஆரம்பித்தனர்.

மேரி ''எனக்கு வரையத் தெரியாது'', என்று முதலில் தயங்கினாள். பிறகு தன்னை அறியாமலேயே வரைவதில் மூழ்கி விட்டாள்.

வரைந்து முடித்தபின் எல்லோரும் அவரவர் படங்களைக் காட்டினர். அவர்கள் பார்த்த கடற்கரைக் காட்சி ஒன்றுதான். ஆனால் ஒவ்வொருவரும் அதை ஒவ்வொரு விதமாக வரைந்திருந்தனர்.


இப்போது மேரிக்குப் புரிந்து விட்டது. 'அன்று தீபா சொன்னது சரிதான். எல்லோரும் ஒரே விதமாகப் பார்ப்பதில்லை. சிந்திப்பதில்லை. வரைவதும் இல்லை'.

உற்சாகத்துடன் மேரி தான் வரைந்த படத்தை எடுத்தாள். அதை வைத்து ஒரு கதை சொன்னாள். எல்லோருக்கும் ஒரே ஆச்சர்யம். ''நீ நன்றாகக் கதை சொல்கிறாயே''! என்று மேரியைப் பாராட்டினர். அன்று மேரி மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள்.

இப்போதெல்லாம் மேரி தனக்குத் தோன்றியதை வரைகிறாள். யார் பாராட்டுகிறார்கள் என்றெல்லாம் பார்ப்பதில்லை. வரைந்து முடித்ததும் படங்களை வைத்து நிறையக் கதைகள் சொல்கிறாள்.

- சட்டநாத் அறக்கட்டளை வெளியீடு

# புதுயுகம் படைப்பரங்க கதைகள்



## நண்பர்கள்

நண்பர்கள் மிகவும் நல்லவர்கள். நானும் நண்பர்களும் சேர்ந்து சுற்றாத இடமே இல்லை. ஒருமுறை வீட்டுகது தெரியாமல் படத்துக்கு போய் அடிவாங்கியதும் உண்டு. நாங்கள் எவ்வளவுதான் விளையாடினாலும் பள்ளியிலும், வகுப்பிலும் படிக்கும் போது மிகவும் அழகாக திறமையாக போட்டிபோட்டு படிப்போம்.

அதுவே எங்கள் வாழ்க்கையில் ஒரு சிறந்த அம்சமாகவும், சிறந்த குணமாகவும் அமைந்தது. ஒருமுறை நாங்கள் ஒரு மந்திரவாதியிடம் மாட்டிக்கொண்டோம். அவர் எங்களை ஒரு இடத்திற்கு அழைத்து சென்றார். எப்படியோ அன்று தப்பினோம்.

என் நண்பர்களும் நானும் படித்த படிப்பே எங்களை அவரிடம் இருந்து அன்று காப்பாற்றியது. பிறகு எங்களின் பத்தாம் வகுப்பு முடிந்தது. அனைவரும் 420க்கு மேல்தான். எங்கள் அம்மாவிடம் பெற்ற கெட்டபேர் அனைத்தும் மறைந்தது. பிறகு எங்கள் சேட்டையும் குறையவில்லை. அறிவின் எல்லையும், அளவும் குறையவில்லை. இப்போது நான் 20,000ரூபாய் வேலையில் அமர்ந்து என் அம்மாவுடனும், அன்பு தோழர்களுடனும் அதே மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்.

-ப.ராம்கி, VIII

## எதை யோசிச்சு செய்யனும்...

ஒருநாள் புலியும், ஓநாயும் எதிர்எதிரே சந்தித்தது. அவை இரண்டும் ஏதோ பேசியது. மறுநாள் எருது ஒன்று இறந்து கிடந்ததை நரி பார்த்தது. சற்று தள்ளி புலியும், ஓநாயும் சண்டை போட்டுக் கொண்டிருந்தது. இதுதான் சமயம் என்று எதையும் யோசிக்காமல் சாப்பிடத் தொடங்கியது. சற்றும் எதிர்பாராத நேரத்தில் புலியும், ஓநாயும் அதனை அடித்து கொன்றது. இரண்டும் சாப்பிட்ட சந்தோசத்தில் அங்கிருந்து சென்றன.



சற்று யோசிப்போம்!
அவை இரண்டும் என்ன பேசியிருக்கும்?
(எதையும் செய்யும்முன் சற்று சிந்தித்து செயல்பட வேண்டும்.)

வன்னியப்பிரியா
V

## படித்தவனாகத்தான்...


ராஜா என்னும் சிறுவர் சிறுவயதிலேயே கீரை விற்று கொண்டிருந்தான். அவன் அம்மா இறந்து விட்டார். அவர் அப்பா சிறுவயதிலேயே அவனை விட்டு சென்று விட்டார். அவன் ஒரு அனாதை என்று ஒரு பெரியவருக்கு தெரிய வந்தது. உடனே பெரியவர் அவனை வளர்த்தார். கீரை தொழிலை நிறுத்திவிட்டு அவனை அவர் படிக்க வைத்தார்.

சிறிது நாள்கள் சென்றது. சிறுவன் பெரிதாக வளர்ந்தான். படிப்பை நிறுத்தி விட்டான். அது பெரியவருக்கு தெரியவில்லை. ஒருநாள் அவன் வேலைக்கு சென்றான். உடனே அவர் எங்கு செல்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன் படிக்க செல்கிறேன் என்று கூறி பெரியவரை ஏமாற்றினான். ஒருநாள் அவருக்கு உண்மை தெரிந்தது. அந்த பெரியவர் அவனை அடிக்காமல் கல்வியை பற்றி எடுத்து கூறினார். அது அவன் மனதை நெருடியது. இருந்தாலும் அவன் பள்ளிக்கு செல்லவில்லை சிறிதுநாள் கழித்து வேலைக்கு செல்லும்போது ஏற்படும் கஷ்டங்களும், மற்ற பிள்ளைகள் பள்ளிக்கு செல்வதும் அவனுக்குள் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியது. அன்று முதல் ஒரு முடிவு எடுத்தான். இனிமேல் நான் வேலைக்கு சென்றால் படித்தவனாகதான் செல்வேன் என்று முடிவு எடுத்து பள்ளிக்கு சென்றான்.

கல்வி கற்க வயது ஒரு தடையே இல்லை.

P.கௌதம்
VI

## ஒரு ஆட்டின் கதை



ஐயப்பன் ஆடு மேய்ப்பவன். அவன் ஒருநாள் ஆடு மேய்க்கும் பொழுது அந்த கூட்டத்தில் இருந்த ஆடு ஒன்று வழி தவறி காட்டிற்குள் சென்று விட்டது. அது காட்டில் வழி தேடி நடந்து கொண்டிருக்கும் போது எதிரில் நரி வந்து விட்டது. நரி ஆட்டை தின்பதற்காக பேசியது. நீ ஏன் காட்டிற்கு வந்தாய் என நரி ஆட்டை பார்த்து கேட்டது. உடனே ஆடு எங்கள் ஊர் சாமிக்கு பலி கொடுக்க நரி ஒன்றை பிடித்து கொண்டு போக வந்தேன் என்று கூறியது. இதை கேட்ட நரி பயந்து ஓடி விட்டது.

S.முத்து கணேஷ்
VI

# கனவுகள்

வெளியே பலத்த மழை. வள்ளி சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு மழை என்றால் மிகவும் பிடிக்கும்.



மழை நின்றது. வள்ளியும் அவள் தங்கை ராணியும் வெளியே ஓடினர். வீட்டுக் கூரையில் இருந்து சொட்டிக் கொண்டிருந்த மழைத் துளிகளைக் கையில் ஏந்தினர். கீழே அங்குமிங்கும் தேங்கிக் கிடந்த மழை நீரில் குதித்து விளையாடினர்.

அப்போது வானத்தில் ஒரு அழகிய வானவில் தோன்றியது. சிவப்பு, நீலம், மஞ்சள், ஊதா, என்று பல வண்ணங்கள்! ஆச்சரியத்துடன் வள்ளி அதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். வானவில் ஒரு பாலம் போல் தோன்றியது. இந்தப் பாலம் எங்கே போகிறது?

வள்ளி கற்பனையில் மிதந்தாள். மெல்லப் பாலத்தில் நடக்க ஆரம்பித்தாள். நடந்து கொண்டே விண்வெளி முழுவதும் சுற்றிப் பார்த்தாள்.

அக்கா!அம்மா கூப்பிடுகிறார்கள், என்ற தங்கையின் குரல் அவளைப் பூமிக்கு இழுத்து வந்தது. அவள் கனவு கலைந்தது.

மறுநாள் மாலை வள்ளியும் ராணியும் பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். வழியில் வானத்தில் ஒரு நாரை பறந்துகொண்டிருப்பதைப் பார்த்தனர். வள்ளி ஒரு கணம் கண்ணை மூடினாள். கனவில் மூழ்கினாள். காடு, மலை, ஊர்கள் என்று எல்லாவற்றையும் கடந்தாள். பல அதிசயக் காட்சிகளைப் பார்த்தாள்.

அவள் ஊரில் பழங்காலத்துச் சிலைகள், கற்கோவில்கள் நிறைய இருந்தன. வள்ளி அவற்றைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருப்பாள். உடனே கனவுலகில் மிதப்பாள். அவளுக்குப் பிடித்தமான சிற்பங்களைச் செதுக்குவாள். தானும் ஒருநாள் சிற்பியாகப் போவதாகத் தங்கையிடம் அடிக்கடி சொல்லுவாள். அவள் வீட்டுக்கு அருகில் ஒரு குளம் இருந்தது. குளத்துப் படியில் உட்கார்ந்து மீன்கள் நீந்துவதைப் பார்ப்பாள். தானும் மீனாக மாறிவிடுவாள். கடலில் பாய்ந்து பாய்ந்து நீந்துவாள். கடலின் ஆழத்துக்குச் சென்று விடுவாள்.




"நீ என்ன யோசிக்கிறாய்? எனக்கும் சொல்லேன்'', என்று ராணி அவளை நச்சரிப்பாள். தன் கனவுகளைப் பற்றி வள்ளி விவரிப்பாள். ராணிக்கும் கனவு இனித்தது. "நீ போகும் இடத்திற்கெல்லாம் என்னையும் அழைத்து செல்கிறாயா?'' என்று கேட்டாள் ராணி.

"ஓ! நிச்சயமாக!" என்று பதிலளித்தாள் வள்ளி.

- நன்றி : கதையருவி

## குட்டி தேவதையும், ரோஜாப்பூவும்



ஒரு ஊரில் மூன்று தேவதைகள் இருந்தன. அவர்கள் வேறு ஊர்களுக்கு போனாங்க. அவங்க போயி கொண்டிருக்கும் போது குட்டி தேவதை சொல்லும், அம்மா அம்மா அந்த ரோஜாபூ வேண்டும் என்று சொல்லுச்சு அந்த ரோஜாவை யார் தொட்டாலும் அவங்களும் ரோஜாப்பு ஆகிடுவாங்க. அவங்க அம்மா போயி பூ பறிக்கும்போது அவங்க ரோஜாபூ ஆகிடுவாங்க. குட்டி தேவதையும், சித்தி தேவதையும் என்ன இன்னும் அம்மாவை காணோம் என்று சொல்லிட்டு சித்தி தேவதை தேடப்போவாங்க. அந்த பூவை பறிக்கும் போது அவங்களும் ரோஜாபூ ஆகிடுவாங்க. அந்த குட்டி தேவதை அழுதுகிட்டே வந்துச்சு. அப்போது அங்கு ஒரு முனிவர் ஏன் பாப்பா அழுற என்று கேட்டார். இந்த ரோஜா பூவை யார் பறித்தாலும் ரோஜாபூ ஆகிடுவாங்க. என் அம்மாவும், சித்தியும் இந்த ரோஜாபூவை பறிக்க வந்தாங்க. அப்போது முனிவர் தீர்த்தம் மாதிரி இருக்கும் எதையோ தெளிச்சாங்க. அப்போ அந்த குட்டி தேவதையோட அம்மாவும் சித்தியும் வந்திடுவாங்க. அப்ப குட்டித் தேவதை சொல்லுச்சு, இந்த ரோஜாப்பூவை திருட்டுத்தனமா பறிக்க சொன்னதால தானே இப்படி ஆச்சு. இனிமேல் நான் தெரியாம பறிக்க மாட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். அப்புறம் எல்லா ரோஜாப் பூவையும் ஒரு ரோஜாவாக மாற்றி முனிவர் கொடுப்பார் அந்த குட்டி தேவதை மிக்க நன்றி என்று சொல்லிட்டு போய்விடும்.

R. திவ்யபாரதி

IX

# அன்பு



அன்பு என்னும் சொல்லுக்குள்
சொர்க்கம் உள்ளது அந்த
சொர்க்கத்தில் இனிமையாக வாழும்
வாழ்க்கையே இனிமை இனிமை
அன்பு அமிர்தத்தை காட்டிலும்
இனிமை எதையும் பணம்
கொடுத்து வாங்கலாம் ஆனால்
அன்பை பாசத்தால் மட்டுமே
வாங்கமுடியும் உயிர், அன்பு
இந்த உலகத்தில் விலையுயர்ந்தது
அந்த செல்வங்களை பணத்தை
கொடுத்து மீட்க முடியாது
இந்த உலகத்தில் ஏழைகள் எவரும்
இல்லை ஏன் என்றால்
அனைவரிடமும் அன்பு உள்ளது
அன்புக்கு இலக்கணம் நட்பு.

N. சிக்கந்தர் பாதுஷா
X

# எண்ணச் சிறகுகள்

தோல்விக் கண்டு கலங்கி,
துவண்டு விடும் எத்தனையோ மாந்தர்!
எத்தனையோ போராட்டங்கள்
வாழ்வின் எண்ணங்களை
நிஜமான வண்ணங்களாக்க
உறுதியான எண்ணமே
முன்னேற்றத்தின் அஸ்திரம்
துவளாதே!
தோல்வியைக் கண்டு துவளாதே!
எப்படியோ வாழ்ந்து விட்டுப் போகும்,
ஏனைய மாந்தர்கள் இடையே,
நிலை பெறு!
தனித்து நிலை பெறு!
போராட்டம்...
உத்வேகத்தின் ஆதாரம்.
தோல்வி
வெற்றியின் முன்னோடி
வெற்றிக்கு உரமிட
எண்ணத்தை உறுதி செய்.
வண்ணச் சிறகுகளை விரித்திடு
எண்ணத்தை உயரச் செய்.

C.கற்பக ஜோதி
XI

# உலகமயம் இந்தியா

இன்று உலக நாடுகளில் பேச கூடிய பொதுவான விஷயம் உலகமயமாதல் ஆகும். பின் தங்கிய நாடுகள் பொருளாதார ரீதியில் சர்வதேச உலக நாடுகளை சார்ந்தே உள்ளது. இந்தியாவின் நிலையும் இதுதான்.

உலக வங்கி நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் தங்களிடையே தாராளமான பரஸ்பர ஒப்பந்தங்களை செய்து கொள்கிறது. உலக வங்கி உறுப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவிலிருந்து மற்ற நாடுகளிலிருந்து வரும் பொருட்களும், மூலதனமும், தொழிலாளர்களும் தடையின்றிச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. இது இந்தியாவில் உலகமயமாதல் பிரச்சனை தொடர்கிறது.

இந்தியாவில் உலகமயமாதல் பின்பற்றப்படுவதால் அனைத்து துறைகளும் தாராளமயமாக்கப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொழில் சாலைகளை அமைக்கும் போது அமெரிக்க தொழிலாளர்களுக்கு அதிக பணம் கொடுக்க வேண்டி உள்ளது.

அதே தொழிற்சாலையினை இந்தியாவில் தொடங்கும்போது அமெரிக்கர்கள் இந்தியர்களுக்கு கொடுக்கும் ஊதியம் அமெரிக்க மதிப்புபடி குறைவாகவும், இந்திய மதிப்புபடி அதிகமாகவும் உள்ளது. எனவே உலக நிறுவனங்கள் இந்தியாவில் வந்து தொழில் சாலைகளை அமைக்கின்றன. எங்க ஏரியா பக்கத்தில ஒரு BBO கம்பெனி உள்ளது. இது உலகமயமாதலின் எல்லை கடந்து விரிந்து கிடக்கிறது என்பதற்கு உதாரணமாகும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இந்தியர்கள்.



மருத்துவர்கள் : 38 %
இந்தியா விஞ்ஞானிகள் : 12%
நாசா பணி புரிபவர்கள் : 36%
மைக்ரோசாப்ட் பணியாளர் : 34%
I.B.M.பணியாளர் : 28%
ஜெராக்ஸ் : 13%

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இந்தியர்கள் 23 விழுக்காடினர் பச்சை அட்டைகள் வைத்துள்ளனர். பில்கேட்ஸ் கூட இந்திய பணியாளர்களால் தான் இவ்வளவு பெரிய கோடீஸ்வரராக வந்ததாக கூறி இருக்கிறார். இதற்கெல்லாம் இந்திய மூளைகள் தடையின்றி செல்வதற்கு உலகமயம் காரணமாக இருந்திருக்கிறது என அறிகிறோம்.

உலகமயம் தொடர்ந்து கொண்டே இருந்தால் கல்வி நிலையங்கள் தனியார் மயம் ஆக்கப்பட்டு கல்வி கட்டணம் உயர்த்தப்பட்டு பணக்கார குழந்தைகள் மட்டும் படிக்கும் நிலை ஏற்பட்டு ஏழை குழந்தைகளுக்கு கல்வி கிடைக்காத நிலை ஏற்படும். குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும்.

உலகமயமாதல் தண்ணீர் வரை வந்து விட்டது.

இதை தடுக்க என்ன செய்ய வேண்டும்.?

என்பதை இந்த கட்டுரையை படித்து விட்டு நாம் தான் யோசித்து செயல்பட வேண்டும்.

என். சுல்தான் அலாவுதீன்
XII

# நேர்முக சிந்தனை

நேர்முக சிந்தனை என்பது எல்லோரும் கேட்கும் ஒரு அறிவுரை அல்லது சொற்றொடர் அல்லது ஆறுதல் வார்த்தை எனலாம். அதாவது நம்மில் பலர் சொல்வார்கள் "Be Positive" "நல்லதே நினை நல்லதே நடக்கும்." "Positive-ஆ think" பண்ணு என்றெல்லாம் பல விஷயங்களை அன்றாட வாழ்வில் நாம் கேட்டிருக்கலாம். இதற்கு காரணம். எண்ணம் போல வாழ்வு. நம் ஆழ் மனது என்ன நினைக்கிறதோ அதைப் போலவே நம் நடைமுறை வாழவில் செயல்கள் நடக்கும்.

(+ve)

இன்று நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணங்களும் காந்த அலைகளாக மாறி, விண்வெளியில் ஒரு குறிப்பிட்ட அலை பண்பைப் பெற்று அதிர்வெண்களாய், அதிர்வுகளாய் சுற்றி வரும் நம் ஆழ் மனது நினைக்கும் ஒவ்வொரு எண்ணங்களும் காந்த அலைகளாக உருவெடுக்கும். குறிப்பிட்ட அல்லது சாதகமான சூழ்நிலை வரும்பொழுது அது நிறைவேறும். நாம் நம்முள் நினைக்கும் எண்ணங்களின் வீரியத்திற்கேற்ப எண்ணங்கள் நிகழ்வாக நடக்கும்.

அதனால் தான் நாம் என்ன நினைக்கிறோம்? எந்த அளவுக்கு வீரியத்துடன் நினைக்கறோம். அதைப் பொருத்து நம் வாழ்வில் காரியங்கள் நிகழும். உதாரணத்திற்கு நல்லது நினைத்தால் நல்லது நடக்கும். கெட்டது நினைத்தால் கெட்டது நடக்கும். அதன் வீரியத்திற்கேற்ப இதனால் மனிதர்கள் நல்லவர், கெட்டவர் என பாகுபடுகின்றோம். ஆழ்மனது என்ன நினைக்கிறதோ, அதற்கேற்ப நம் உடலின் செயல்பாடுகள், நடத்தைகள் இருக்கும். உடலின் வெப்பநிலை, குருதி ஓட்டம், வேதியியல் வினைகள், ஹார்மோன்களின் சுரப்பிகளின் உற்பத்தி இவை அனைத்தும் எண்ணும் எண்ணங்களுக்கேற்ப மாறும். எண்ணங்களுக்கேற்றவாறு செயல்படும் போது நம் நடத்தைகளில் மாறுபாடுகள், வித்தியாசங்கள் தோன்றும். உதாரணத்திற்கு (பொய், கோபம், தீய எண்ணங்கள்) எண்ணம் தூய்மையானால், சொல் தூய்மையாகும். சொல் தூய்மையானால் நடத்தைகள் தூய்மையாகும். பின்பு வாழ்வே பரிசுத்தமாகி விடும்.

"எண்ணம் போல் வாழ்வு"

- ஆர்.கார்த்திக்
பி.ஏ. 2ம் ஆண்டு

# விடியல் நம் பையில்

ஒரு அரசர் மக்களின் மனநிலையை அறிய ஒரு சோதனை செய்தான். மக்கள் அதிகமாக செல்லும் ஒரு பாதையின் குறுக்கே ஒரு பெரிய பாறாங்கல்லைப் போட்டு வைத்தான்.

அந்த பாதையின் வழியாகச் செல்லும் பயணிகள் பாறாங்கல்லைக் கண்டு எரிச்சலடைந்தனர். சிலர் அரசரை திட்டித் தீர்த்தார்கள். சிலர் இந்தக் கல்லை விட்டு ஒதுங்கி வேறு வழியாகச் சென்றார்கள். சிலர் அதன் மீது ஏறிக் குதித்துச சென்றார்கள்.

சிலர் கல்லை எவரேனும் நகர்த்திய பிறகு போகலாம் என்று பயணத்தை தள்ளிப் போட்டார்கள். யாருக்கும் கல்லை நகர்த்த வேண்டும் என்று எண்ணம் தோன்றவே இல்லை.

அவ்வழியாக வந்த ஒரு இளைஞன் அந்த கல்லை பார்த்தான். நகர்த்த முயற்சி செய்தான்.பலர் பரிகாசம் செய்தார்கள். ஆனால் அந்த இளைஞன் எதற்கும் கலங்கவில்லை. விடாமுயற்சியாக போராடி கல்லை நகர்த்தி உருட்டி விட்டான். அந்த கல்லுக்கு கீழே....ஒரு கடிதமும், பையும் இருந்தது. கடிதத்தைப் படித்தான்.

இந்த கல்லை நகர்த்துபவர்கள் பையிலுள்ள 1,000 பொற்காசுகளை பரிசாக எடுத்துக் கொள்ளலாம். இக்கதையில் வரும் இளைஞன் நமக்கு முன்மாதிரி. எனவே, மாணவனே, மாணவியே...இளையோரே..! காலம் கடத்தாதீர். விரைந்து முன்னேறுவோம். சாதனை நம் கையில், விடியல் நம் பையில்.

- சி.பிரேம்குமார்

# காரியம் செய்த வீரர்



உயர்கல்வி நிலையங்களில் வாழ்பவர் இவர்.
கல்லாமை இல்லாமை ஆக்க
இவரே தொடர்ந்தார் பயணத்தை
இவர் கல்வி கற்றவரில்லை. இவர் ஒரு போதும்
கற்றோரை யெல்லாம் தன் ஆளுமையால் ஆண்டவர்
மனதில் துணிந்த செயலால் முளைத்த
மண்ணில் பல மாற்றங்களைத் தந்தவர்
பேச்சோ குறைவு செயலோ நிறைவு
இவர் புகழ்சொல்லும் பாட சாலைகள்
பேச்சிலே தெளிவாயிருக்கும்
காரியம் செய்த வீரர் இவரே
கர்ம வீரர் காமராஜர்.

ஆர்.கார்த்திக்
தேடல் அரங்கம்



ஆர்.வினோத்
12ஆம் வகுப்பு
கனவுகள்

# மூன்று நாள் மட்டும்



(ஹெலன்கெல்லர் ஒரு அதிசயப் பெண்மணி. பிறவிலேயே கண பார்வையை இழந்தவர். காதும் கேளாதவர். தொட்டு உணர்ந்தே உலகை அறிந்து கொண்டவர். தன் வாழ்நாள் முழுவதும் பிறருக்கென உழைத்தவர். அவர் எழுதிய கட்டுரையிலிருந்து)

மனிதர்கள் கண் பார்வையைப் பெற்றிருந்தும் அதன் மதிப்பை உணர்வதில்லை. சில சமயம் நான் நினைப்பதுண்டு. மனிதர்கள் சில நாட்கள் எதையும் பார்க்க முடியாமல், கேட்க முடியாமல் இருந்தால் நிச்சயம் அந்த அனுபவத்திலிருந்து நிறையக்கற்பார்கள். இருட்டு அவர்களுக்குப் பார்வையின் மதிப்பை உணர்த்தும். அமைதி அவர்களுக்குப் பார்வையின் மதிப்பை உணர்த்தும். அமைதி அவர்களுக்கு ஒலிகளின் அருமையை உணர்த்தும்.

பார்வைத் திறன் உள்ள என் நண்பர்கள் என்னவெல்லாம் பார்க்கிறார்கள் என்று அவ்வப்போது நான் சோதித்துப் பார்ப்பதுண்டு.

சமீபத்தில் என் தோழி காட்டில் நீண்ட தூரம் நடந்து விட்டுத் திரும்பியிருந்தாள். அவளிடம் 'நீ காட்டில் என்னவெல்லாம் பார்த்தாய்?' என்று விசாரித்தேன். அவளோ, 'சொல்லும்படி ஒன்றும் இல்லை" என்றாள். ஒரு மணி நேரம் காட்டில் சுற்றிவிட்டு ஒன்றுமே பார்க்கவில்லையா ? அது எப்படி!

பார்வையில்லாத உனக்கே நூற்றுக் கணக்கான பொருள்கள் தென்படுகின்றன. அவற்றைத் தொட்டுப் பார்த்தேநான் அறிந்து கொள்கிறேன். இலையின் மென்மையான அமைப்பை உணர்கிறேன். சில மரங்களின் வழவழப்பான பட்டைகளையும், வேறு சில மரங்களின் சொர சொரப்பான பட்டைகளையும் அன்புடன் வருடிப் பார்த்தேன்.

வசந்த காலத்தில் மொட்டுகள் இருக்கும் என்ற நம்பிக்கையில் மரக்கிளைகளைத் தொட்டுப் பார்க்கிறேன். அதிர்ஷ்டவசமாகச் சில சமயம் கிளைகளில் பறவையின் பாட்டு ஒலி அதிர்வுகளை உணர்கிறேன்.

இவற்றையெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஏக்கத்தால் சில சமயம் என் இதயம் அழும். தொட்டுப் பார்க்கும் போதே எனக்கு இவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றால் அவற்றைக் கண்ணால் பார்க்கும்போது எவ்வளவு அழகாக இருக்கும்!

'மூன்றே மூன்று நாட்கள் மட்டும் பார்வை கிடைத்தால் நான் எதையெல்லாம் பார்க்க வேண்டும்' என்று கற்பனை செய்து வைத்திருக்கிறேன்.

முதல் நாளில் அன்பும் பாசமும் காட்டி என் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிய மனிதர்களைப் பார்க்க விரும்புவேன்.

கண்களால் என் நண்பர்களின் இதயத்தை எப்படிப் பார்ப்பது என்று எனக்குத் தெரியாது. விரல் நுனிகளால் முகவடிவங்களைத் தொட்டுப் பார்த்துத்தான் அவர்களை அறிந்துள்ளேன். அவர்களது சிரிப்பு, சோகம் போன்ற எல்லாப உணர்ச்சிகளையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

நாம் பெரும்பாலும் மனிதர்களின் வெளித் தோற்றத்தைத்தான் பார்க்கிறோம். கண் பார்வையால்நண்பர்களின் உள் மனதைப் பார்க்க முயற்சி செய்கிறோமா?

அடுத்ததாக எனக்குப் படித்துக் காட்டப்பட்ட புத்தகங்களைப் பார்க்க விரும்புவேன். அன்று மாலை காட்டுக்குள் வெகுதூரம் நடந்து சென்று இயற்கையின் அழகை ரசிப்பேன். வண்ணமயமான சூரிய அஸ்தமனத்தைக் காண விரும்புவேன்.

இரண்டாம் நாள் காலை. இருளை நீக்கித் தூங்கும் உலகத்தை எழுப்பும் சூரிய ஒளியைக் கண்டு களிக்க விரும்புவேன். அன்று நான் அருங்காட்சியகத்துக்குச் சென்று மறைந்த விலங்குகள், பூமி உருவான கதை, மனிதனின் வளர்ச்சி இவற்றைப் பார்ப்பேன். உலக வரலாற்றை அறிய முயலுவேன்.

பிறகு சிற்பக் கண்காட்சிகளைப் பார்க்க விரும்புவேன். இதுவரை தொட்டுப் பார்த்த சிலைகளைக் கண்ணால் பார்ப்பேன். ஓவியங்களைப் பற்றி ஓவியர்கள் விவாதிப்பதைக் கேட்டிருக்கிறேன். அவற்றை இப்போது பார்த்துப் புரிந்து கொள்ள முயல்வேன்.

மாலை திரைஅரங்குக்குச் சென்று நாடகங்கள் மற்றும் நடனங்களைப் பார்க்க விரும்புகிறேன். இதுவரை நடனங்களின் அழகை மேடையில் நடக்கும் கால் அடிகளின் அதிர்வுகளாலும், இசை ஒலி அதிர்வுகளாலும் மட்டுமே உணர்ந்திருக்கிறேன்.

மூன்றாவது நாள் காலை அன்றாட வாழ்க்கையில் உலகம் எப்படி இயங்குகிறது என்பதைக் காண விரும்புவேன். நெரிசலான ஒரு சாலையில் நின்று கொண்டு மனிதர்களின் எல்லாவிதமான முகங்களையும் பார்ப்பேன். அவர்களைப் புரிந்துக் கொள்ள முயல்வேன். அங்கிருந்து குடிசைப் பகுதிகள் தொழிற்சாலைகள் , குழந்தைகள் விளையாடும் பூங்காக்கள் என்று சுற்றுவேன்.

மகிழ்ச்சி - துக்கம் இவை இரண்டையும் காண எப்போதும் என் கண்களைத் திறந்து வைத்திருப்பேன். இந்த அனுபவங்களிலிருந்து மக்கள் எப்படி உழைக்கிறார்கள். வாழ்கிறார்கள் என்று ஆழமாகச் சிந்தித்துப் புரிந்து கொள்வேன்.

மூன்றே நாட்களுக்குள் உலகில் நான் விரும்பிய எல்லாவற்றையும் பார்க்க முடியாதுதான்! மீண்டும் என்னை இருள் சூழ்ந்த பின்னர்தான் நான் எதையெல்லாம் பார்க்காமல் விட்டு விட்டேன்.

நீங்கள் ஓரிரு நாட்கள் பார்க்க முடியாமல் இருந்து விட்டுப் பின் மீண்டும் பார்க்க முடியும்போது நிச்சயம் பார்வையை முழுமையாகப் பயன்படுத்துவீர்கள். நீங்கள் பார்ப்பவை எல்லாம் அரிதாகத் தோன்றும். அப்போதுதான் நீங்கள் உண்மையாகப் பார்ப்பீர்கள். ஒரு புதிய உலகம் உங்கள் முன் விரியும்.

பார்வையற்ற நான் பார்வையுள்ள உங்களுக்குத் தரும் குறிப்புகள் இதோ - இன்று மட்டுமே உங்களால் பார்க்க முடியும் என்ற உணர்வோடு எல்லாவற்றையும் பாருங்கள். இதே போலவே மற்ற புலன்களையும் பயன்படுத்துங்கள். மனிதர்கள் மற்றும் பறவைகளின் குரல் இசையைக் கேளுங்கள். தொடு உணர்வு நாளை இருக்காது என்பதுபோல் ஒவ்வொரு பொருளையும் தொட்டு உணருங்கள். பூக்களின் மணம், உணவின் ருசி எல்லாவற்றையும் கவனியுங்கள்.




ஒவ்வொரு புலனையும் முழுமையாகப் பயன்படுத்துங்கள் எல்லாப் புலன்களையும் விடப் பார்வைதான் அதிக மகிழ்ச்சி தரக்கூடியது என்று நான் உறுதியாகச் சொல்வேன்.

-ஹெலன் கெல்லர்

**வழக்காடு மன்றத் தலைப்பு : ஏழைகள் சத்துணவு சாப்பிட முடியுமா? முடியாதா?**



முடியும் என்ற அணியில்
முத்துச்சாமி



நடுவர்
நல்ல பெருமாள்



முடியாது என்ற அணியில்
வெள்ளைசாமி

நடுவர் : பெரியோர்களே! (லொக்...லொக்) தாய்மார்களே!(லொக் லொக்) உங்கள் அனைவருக்கும் வணக்கம். இந்தப்பட்டி மன்றம் (லொக் லொக்)ஆரோக்கியத்துக்கான பட்டி மன்றம் (லொக் லொக்)முதலில் வெள்ளைசாமியைப் பேச அழைக்கிறேன்.

வெள்ளை : அனைவருக்கும் வணக்கம். சத்துணவு சாப்பிட ஏழைகளுக்கு முடியுமா? சத்துணவு என்றால் புரோட்டீன் வேண்டும்.கார்போஹைட்ரேட் வேண்டும். கொழுப்பு வேண்டும். தாது உப்பு வேண்டும். விட்டமின்கள் வேண்டும் இதெல்லாம் சாதாரண மக்களுக்குக் கிடைக்குமா?நீங்களே சொல்லுங்கள்.

நடுவர் : அடுத்து (லொக்...லொக்) முத்துச்சாமி பேசுவார்.

முத்து : வெள்ளைசாமி நம் உடம்புக்குத் தேவையானவை எவை என்று மிக அருமையாகச் சொன்னார். ஆனால் ஒன்றை மறைத்து விட்டார். இவையெல்லாம் கிடைக்கக்கூடிய பொருள்களைச் சொல்லியிருந்தால் ப்பூ இவ்வளவுதானா என்று நீங்கள் ஆச்சரியப்பட்டிருப்பீர்கள். உதாரணமாக புரோட்டீன் சத்து பால், மீன், முட்டை, கோதுமை, கேழ்வரகு போன்ற பல பொருள்களில் இருக்கிறது.

வெள்ளை : இதெல்லாம் ஏழைகளுக்குக் கிடைக்குமா?

முத்து : ஏன் கிடைக்காது? உணவுக்காகச் செலவிடும் தொகையைத் திட்டமிட்டுச் செலவழித்தால் முடியும். இரண்டு தினங்களுக்கு ஒரு முட்டை நம் உடலுக்குத் தேவை. வாரம் ஒரு முறையாவது ஒரு முட்டை சாப்பிடக் கூடாதா? வாரம் ஒரு முறை ஒரு நபருக்கு 2.25 காசு செலவழிக்கக் கூடாதா? இது முடியாதா? எத்தனை டீ குடிக்கிறோம் ?

வெள்ளை : டீ குடிப்பதைக் கண்டிக்கிறார் எதிர் கட்சிக்காரர். இதைநான் ஆட்சேபிக்கிறேன். நடுவர் அவர்களே ! வைட்டமின் சத்துக்கு ஏழைகள் எங்கே போவார்கள் ? அதற்கான உணவை எப்படிப் பெறுவார்கள் ?

முத்து : இரும்புச்சத்து, புரதச் சத்து எல்லாவற்றையும் ஏழைகள் பெறமுடியும். நிலக்கடலை, பருப்பு, வாழைப்பழம், பப்பாளிப்பழம், கிழங்குகள், காய்கறிகள், கீரைகள் இவற்றிலேயே எண்ணற்ற சத்துக்கள் உள்ளன. கீரையும், நிலக்கடலையும் ஏழைக்கு எட்டாத பொருளா? கிராமங்களில் கோடிக்கணக்கானோர் கண் நோய்க்கு ஆளாகியிருக்கின்றனர். காரட் சாப்பிடும் பழக்கம் இருந்தால் இந்த வியாதியில் இருந்து தப்பலாம். வாரம் ஒருமுறை 1 ரூபாய்க்கு காரட் வாங்கிச் சாப்பிடமுடியாதா? நாக்கு ருசிக்கு அடிமையாகிப் பணத்தையும் செலவழித்து உடம்பையும் கெடுத்துக் கொள்கிறோம். காய்கறிகள், பழங்கள், கீரைகள், பயறு வகைகள் எல்லாவற்றிலும் சத்து இருக்கிறது.

வெள்ளை : நான் சொல்ல வந்தது என்னவென்றால்...

முத்து : ச்சூ! உட்காருங்கள். சொல்வதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும். எதைச் சொன்னாலும் அது முடியாது ! அது நடக்காது! என்று சொல்வதை விட்டுவிட வேண்டும். திட்டமிட்டால் வெற்றி பெற முடியும்.

நடுவர் : நான் தீர்ப்புக் கூறுகிறேன் (லொக்...லொக்)நானே ஒரு வியாதியஸ்தன். எனக்கே உண்மை இப்போதுதான் புரிகிறது. (லொக்...லொக்) சத்துணவு என்றால் எட்டாத கொம்பு இல்லை. எல்லோர்க்கும் கிடைக்கக்கூடிய உணவு தான். (லொக்...லொக்) கண்ட கண்ட மாத்திரை மருந்துகள் டானிக் சாப்பிட்டு உடம்பு ஒப்பேறவில்லை. (லொக்...லொக்) இனிமேல் நானும் சாப்பாட்டைத் திட்டமிடுவேன். சத்துணவு ஏழைகளால் சாப்பிட முடியும் என்று தீர்ப்பளிக்கிறேன்.

(கை தட்டல்)

நன்றி : அறிவொளி கையேடு

# அறிவோம் அறிவியல்

**மின்னலிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியுமா ?** (தமிழக சட்டமன்றத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ். எழுப்பிய கேள்வி இது.)


மின்சாரம் என்பது ஒரு சக்தி (energy) அப்படி ஒன்று இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துப் பெயர் சூட்டியவர் கி.மு. 300-ல் வாழ்ந்த தேல்ஸ் என்கிற கிரேக்க அறிஞர் . அவர் பிசினை (Amber) ஒரு இறகுடன் தேய்த்தபோது, இறகு பிசினை நோக்கி நகர்ந்து சிலிர்த்தது. கிரேக்கத்தில் Amberக்கு எலெக்ட்ரான் என்று பெயர்.

சக்தியை உருவாக்க முடியாது; அழிக்கவும் முடியாது. ஆனால், ஒரு ஆற்றலை இன்னொரு ஆற்றலாக மாற்ற முடியும். இது பௌதிகத்தின் அடிப்படை விதி. எரிபொருள் எனர்ஜி மூலம் மின்சார எனர்ஜி தயாரிக்க தெர்மல் பவர் ஸ்டேஷன்" தேவை. தண்ணீரிலிருந்து தயாரிக்க வேண்டுமானால் 'ஹைட்ரோ பவர் ஸ்டேஷன்'வேண்டும்.

கீழே இறங்காமல் மேகங்களுக்குள்ளேயே பளிச்சிடும் மின்னலுக்கு Sheet lightning என்று பெயர். கீழே விஜயம் செய்தால், அது forked lightning அது எங்கு இறங்கும் ? கடைசி விநாடி வரை தெரியாது! மேலேயிருந்து மைக்ரோ விநாடியில் பத்து மைல்கள் கீழ் நோக்கிக் கடக்கும் மின்னல் காரணமாக அதைச் சுற்றிலும் உள்ள காற்று மண்டலம் 54,000டிகிரி (பாரன்ஹீட்) அளவுக்குச் சூடாகிறது. ஆகவே, மின்னலை நோக்கி ஒரு மொபைல் பவர் ஸ்டேஷனை படுவேகமாக ஓட்டிக் கொண்டு போக முடியாது. இது எரிமலையின் அருகே சமையல் செய்யக் காத்திருப்பது மாதிரிதான்.


அப்படியென்றால், மின்னல் 'வேஸ்ட்'தானா? மின்னலால் ஏற்படும் வெப்பம் காற்று மண்டலத்தில் உள்ள நைட்ரஜனையும் , ஆக்ஸிஜனையும் நைட்ரஸ் ஆக்ஸைடு ஆகவும் மாற்றி, மழைத்துளிகள் மூலம் பூமிக்கு அனுப்புகிறது. அதாவது, பூமிக்குத் தேவையான 15 மில்லியன் டன்கள் எடையுள்ள, நைட்ரஜன் உரம்! அமேசான் போன்ற அடர்த்தியான காடுகளில் மரங்கள் வளர, வள்ளல் மின்னலாரே காரணம்.

# வரலாற்று சிறப்புமிக்க மீரட்



முதல் இந்திய சுதந்திரப் போரின் 150வது ஆண்டுவிழா மீரட் நகரில் துவங்கி சிறப்பாக நடைபெற்றுள்ளது. 1857-ல் முதன்முதலில் மீரட்டில் தான் சிப்பாய்கள் 'டில்லி சலோ'எனப்படும் டில்லிக்குச் செல்வோம் என்ற முழக்கத்துடன் புரட்சியைத் துவங்கினர். டில்லியில் இருந்து 72கி.மீ. தொலைவில் உள்ள பாரம்பரியமான நகர் மீரட் ஆகும். ராணுவப் பிரிவுகளின் அமைவிடங்களில் மீரட் இன்றும் முக்கிய ராணுவ மையமாகத் திகழ்கின்றது. ராவணணின் மனைவி மண்டோதரியின் தந்தை மயன் ஆட்சி செய்த மயன்ராஷ்டிரம் என்பதே மருவி மீரட் என ஆனது. அசோகரின் ஆட்சிக்காலத்தில் மீரட் முக்கியமான புத்த மையமாகத் திகழ்ந்தது. மங்கோலிய பரம்பரையில் வந்த தைமூர் என்ற கொடுங்கோல் மன்னன் மத்திய ஆசியாவில் இருந்து இந்தியாவிற்கு வந்தான். தைமூரால் இந்தியாவில் சூறையாடப்பட்ட நகரங்களில் மீரட் நகரும் ஒன்றாகும். டில்லியில் காணப்படும் அசோகரது கல்வெட்டு தூண் மீரட் நகரில் இருந்து பெரோஷா துக்ளக்கினால் இடம் பெயரச் செய்யப்பட்டது என வரலாறு தெரிவிக்கின்றது.

## ஐயம் தெளி!



**செயற்கை கோள்களை சுமந்து சென்று அதன் சுற்றுப்பாதையில் விட்ட பின் ராக்கெட்டுகளின் கதி என்ன?**

செயற்கோள்களை சுமந்து சென்ற ராக்கெட்டுகளின் அடுக்கடுக்கான கட்டுமானங்கள் சுழன்று விழுந்து விடுகின்றன. நமது வளிமண்டலத்தினுள் அது நுழையும்போது சாம்பலாகி விடுகிறது. ஒவ்வொரு ஏவுதலுக்கும் ஒரு ராக்கெட் வீணாவதால், மறுபடி பயன்படுத்தக்கூடிய விண்வெளி ஓடம் உபயோகத்துக்கு வந்துள்ளது.

**ஜூலை**

1. சர்வதேச நகைச்சுவை தினம்
2. சர்வதேச கூட்டுறவு தினம்
11. உலக மக்கள் தொகை தினம்
15 காமராஜர் பிறந்த தினம் - கல்வி தினம்
28. சர்வதேச அகதிகள் தினம்

தொகுப்பு : சி.அருண்குமார்

# கண்டுபிடிப்போம் வா !

ஓட்டமாய் ஓடும்
உருண்டு உருண்டு ஓடும்
பள்ளத்தைக் கண்டால்
பாய்ந்து பாய்ந்து ஓடும் - **அது என்ன?**

உயிர் இன்றி ஊரெல்லாம் திரியும்
உருவம் இன்றி ஓடித் திரியும்
கைகள் இன்றித் தொட்டு விளையாடும்
கால்கள் இன்றிக் கண்ட இடமெல்லாம்
புகுந்து வரும் - **அது என்ன?**

எனக்கு மேல் ஒரு கூரை
நான் கிட்டப் போனால்
அது எட்டப் போகும் - **அது என்ன?**

சரசரவென்று அழுதுகொண்டே விழுவான்
கலகலவென்று பூமியைச் சிரிக்க வைப்பான்
**- அது என்ன?**

வெள்ளையாய் இருப்பேன்
கருப்பாய் மாறுவேன்
என்னையும் அறியாமல்
தண்ணீராய்ப் பொழிவேன் - **நான் யார்?**

எழுந்து விழுந்து தாவிடும்
இரவும் பகலும் இரைந்திடும்
எண்ணில்லாத உயிர்களை
இதமாய் வயிற்றில் அடக்கிடும்
கனத்த பொருளை விழுங்கிவிடும்
கட்டையைக் கொடுத்தால் உமிழ்ந்திடும்.
**- அது என்ன?**

அக்கா தங்கை உறவுண்டு
அண்டை அண்டை வீடுண்டு
கிட்ட கிட்ட வந்தாலும்
தொட்டுக் கொள்ள முடியாது
**- அது என்ன?**

ஏழை படுக்கும் பஞ்சணையை
எடுத்துச் சுருட்ட ஆளில்லை - **அது என்ன?**

தாளைக் கொடுத்தால் தின்பான்
தண்ணீர் கொடுத்தால் மடிவான் -
**அது என்ன?**

விண்ணைச் சிரிக்கச் செய்வாள் - பார்த்தால்
கண்ணைப் பறிக்கச் செய்வாள்
**- அது என்ன?**

மனிதன் போடாத பந்தலிலே
மலர்ந்து கிடக்குது மல்லிகைப்பூ
**- அது என்ன?**

இவனின்றி பூமி இயங்காது
இவனின்றிப் பயிர்கள் விளையாது
இவனின்றி மழையும் பெய்யாது
இவனின்றி உறக்கம் கலையாது
**- யார் அவன்?**

ஏழு வண்ணத்தில் வில்லாம்
எட்டாத உயரத்தில் வில்லாம்
**- அது என்ன?**

காலையில் ஒளிவான்
இரவில் வெளி வருவான் - **அவன் யார்?**

இரண்டு பக்கம் பள்ளம்
இடையிலே பாலம் - **அது என்ன?**

உடலுக்கு ஒரு போர்வை
பாதுகாக்க ஒரு கவசம்
தொட்டால் தெரிந்து கொள்ளும் - சூடு
பட்டால் பதறிவிடும் - **அது என்ன?**


சொன்னதைக் கேட்பான
சொல்லச் சொல்லக் கேட்பான
கேட்டதைத் திரும்பச் சொல்ல மாட்டான்
**- அவன் யார்?**

விடைகள் மாறி, மாறி கொடுக்கப்பட்டுள்ளன. கண்டுபிடித்து மகிழ்க.


**காற்று, நெருப்பு, பூமி, தண்ணீர், வானம், சூரியன், மின்னல், நிலா, நட்சத்திரம், மழை, மேகம், வானவில், கடல், காது, மூக்கு, கண், தோல்**

படிக்கிற பெண்ணுக்கு நடுவில் இது வேறயா?ன்னு யோசிக்காதீங்க. உங்களை ரிலாக்ஸ் செய்யவும், மூளையை உசுப்பிவிட்டு உற்சாகப்படுத்தவும், புத்துணர்ச்சி பெறவும் இந்தப் புதிர்கள் உங்களுக்கு உதவும். என்ன சிஸ்டர்ஸ்... ஆட்டத்துக்குத் தயாரா?

## 1




காலி கட்டத்தில் இடம் பெற வேண்டிய படம் கீழே உள்ளவற்றில் எது?




A B C D

## 2




இப்படத்தில் எத்தனை சதுரங்கள் உள்ளன.

## 3




இந்தப் படத்தில் எத்தனை சதுரங்கள் உள்ளன?

## 4




இந்தப் படத்தில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

## 5




இதில் 12 தீக்குச்சிகள் உள்ளன. இதில் இரண்டு தீக்குச்சிகளை மட்டும் எடுத்துவிட்டு இரண்டு சதுரங்களை உருவாக்குவது எப்படி?

## 6



காலி இடத்துக்குப் பொருத்தமான விடை கீழே உள்ளவற்றில் எது?




A B C D

## 7




இந்தப் பிறை வடிவத்தை இரண்டு நேர் கோடுகளை வரைவதன் மூலம் ஆறு துண்டுகளாக வெட்ட வேண்டும். உங்களால் முடியுமா?

## 8




இதில் எத்தனை முக்கோணங்கள் உள்ளன?

## 9



இந்தக் கடிகாரத்தை 6 துண்டுகளாக வெட்ட வேண்டும். அது எந்த வடிவத்திலும் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு துண்டிலும் உள்ள எண்களின் கூட்டுத்தொகை ஒரே மாதிரி இருக்க வேண்டும். உங்களால் முடியுமா?

## 10




இந்த வரிசையில் கடைசியில் வரவேண்டிய படம் எது?கீழே உள்ளவற்றிலிருந்து பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்கவும்.



A B C D

## 11




இடது பக்கத்தில் உள்ள படத்தில் உள்ள மூன்று காசுகளை மட்டும் மாற்றி அமைத்து வலது பக்கப் படத்தில் உள்ளதைப்போல மாற்ற முடியுமா?


---

விடைகள்


1. A
2. 14 சதுரங்கள்
3. 11 சதுரங்கள்
4. 20 முக்கோணங்கள்
5.



6. B
7.



8. 47 முக்கோணங்கள்
9.



10. B
11.



# பாராட்டுக்கள்!

**P.முனியசாமி,** B.A. ஆங்கிலம் S/o. பாண்டி–ராக்கம்மாள், கிழக்குத்தெரு, கரும்பாலை.



***மிகவும் நலிந்த குடும்பத்தில் பிறந்து சமூக பொருளாதார தடைகளை கடந்து இன்று தியாகராசர் கல்லூரியில் ஆங்கில இலக்கிய படிப்பில் காலடி வைத்துள்ள முனியசாமி, முகிலன் என்று எல்லோராலும் அழைக்கப்படுபவர். கொலாஜ் மற்றும் ஆடை வடிவமைப்பு முறைகளில் அதிக ஆர்வம் கொண்டவர். மாயச்சட்டை நாடகத்தின் 25 அரங்கேற்றங்களுக்கு மேல் பங்கேற்றுள்ளார். ASKB வழங்கிய பாராட்டு மடல் 2005 விருதினை வென்றவர்.

நகைச்சுவை குணத்தால் எல்லோரிடமும் எளிமையாக பழகி உறவாடும் குணம் கொண்டவர். முதல் தலைமுறை கல்லூரி மாணவர். சீடு மாணவர்களிலே தியாகராசர்கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படிக்கச் செல்லும் முதல் மாணவர் என்பது பெருமைக்குரியது. இவர் சீடு வேர்கள் அரங்கத்தில் முழுமைத்துவ வகுப்புகளுக்கு தொண்டராகவும், சீடு இளைஞர் கலைக்குழு உறுப்பினராகவும் இருக்கிறார். சீடு–ல் 1999ம் ஆண்டிலிருந்து உறுப்பினராக இருக்கிறார் என்பது சிறப்பு செய்தியாகும். இவரின் கல்வி முயற்சிகள் வாழ்க! முகிலன் வளமைகள் பெறுக. வாழ்த்துக்கள்.

**S.முருகபாண்டி,** B.A., RPS, S/o.சுந்தரபாண்டி, தனலெட்சுமி, 333, கிழக்குத் தெரு, கரும்பாலை



***மிகவும் நலிவுற்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த முருகபாண்டி சீடு–ன் ஐந்தாண்டு கால உறுப்பினர். நடனம், பாடுதல், கிரிக்கெட் ஆடுதல் போன்றவற்றில் பெரும் ஆர்வம் உடையவர். நடனம், பாடல், கிரிக்கெட் போன்றவற்றில் சென்ற இடமெல்லாம் பாராட்டுகளையும், பரிசுகளையும் வாங்கி வந்தவர். ASKB வழங்கிய திருவெனிநந்தானி கிராபிக்ஸ் விருதை பெற்றவர். மாயச்சட்டை நாடகத்தின் 25க்கும் மேற்பட்ட அரங்கேற்றங்களில் பங்கு பெற்றவர். அமெரிக்கன் கல்லூரியில சமயம், தத்துவம், சமூகவியல் துறையில் சேர்ந்துள்ள முருகபாண்டி குடும்பத்தின் முதல் தலைமுறை படிப்பாளர். எப்போதும் நகைச்சுவையால் பிறரை மகிழ்விப்பவர். சீடு–ன் ஐந்தாண்டு கால உறுப்பினரான S.முருகபாண்டியின் கல்விப்பயணம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.

***நம் சீடு அறக்கட்டளை மாணவர்கள் P.பாண்டியராஜன், C.கற்பகஜோதி, K.முத்துப்பாண்டி, M.மகுடபதி, முத்துசரணவன், R.ராசிக் அகமது, P.மணிகண்டன் போன்றோர் தங்கள் குடும்பத்திலேயே முதன்முறையாய் பத்தாம் வகுப்பை முடித்து மேல்நிலைக்கல்வி கற்க சென்றுள்ளனர். இவர்களின் கல்விப்பயணம் வெற்றிகரமாய் அமைய வாழ்த்துகள்.

## நன்றிகள்!

**சீடு டிரஸ்ட் ஆதரவாளர் திருமிகு. பாரிகணேசன் அவர்களின் நண்பர்கள் திருமிகு.அருள்தங்கராஜ், திருமிகு. ராமநாதன், திருமிகு. செந்தில்குமார் போன்றோரும், திருமிகு. சந்திரமோகன் அவர்களின் நண்பர்கள் திருமதி. பிரதிமாராஜன், திருமிகு. ஸ்ரீதேவி, திருமிகு. மகிலா பர்வீன், திருமிகு. சாய் தீபிகா, திருமிகு.முரளி, திருமிகு. சுமதி, திருமிகு. அசோக், திருமிகு. சுகன்யா போன்றோரும் +2 மாணவர்கள் 5 பேருக்கும், +1 மாணவர்கள் 9 பேருக்கும் நல் உதவிகள் வழங்கி தடையற்ற கல்வி பயணத்திற்கும், இனிய சமூக மாற்றத்திற்கும் உதவியுள்ளனர். சீடு டிரஸ்ட் மேற்கண்ட நண்பர்களின் நல்வாழ்விற்கும், குடும்ப நலனிற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் இறைவனை பிராத்திக்கின்றோம்.**

நன்றிகளுடன்
அ.ச.கார்த்திக்பாரதி

## 2007 ஜுன் மாதம் சீடு டிரஸ்ட் நடவடிக்கைகள்

1.6.07 சீடு வாண்டுகள், வேர்கள், கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு செந்தமிழ் நூலகத்தில் நூலக வகுப்புகள் நடைபெற்றன.

2.6.07 CERD Project Leader S.ஞானகரன் Seed டிரஸ்ட் குழந்தைகளுடன் வளர்ச்சிப்பணிகள் குறித்து கலந்துரையாடினார்.

4.6.07 வேர்கள் மற்றும் கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு கோடை விடுமுறை முடிந்து பள்ளி தொடங்கியது.

6.6.07 வாண்டுகள் அரங்க குழந்தைகளுக்கு பள்ளி வகுப்புகள் ஆரம்பமாயின.

9.6.07 சீடு 10 மற்றும் 12வது மாணவர்களுக்கு தனிப்பயிற்சி வகுப்புகள் துவங்கியது. இதன் பயனாளிகள் ஆறு பேர்.

10.6.07 * சம்பகுடி சீடு டிரஸ்ட் குழந்தைகள் நாகமலை பகுதியில் ஒருநாள் சிற்றுலா சென்றனர். தென்னந்தோப்புகளில் மரபு சார்ந்த விளையாட்டுகள், விளையாடியும், குளத்தில் குதூகலமாய் குளித்தும், மலை ஏறியும், சமணர் படுகை வரலாற்றை அறிந்தும் மகிழ்ந்தனர். உயரமான மலைகளில் நின்று மதுரையின் முழுஅழகினையும் கண்டு ரசிக்க ஆசை கொண்டனர். 4ம் வகுப்பு முதல் 12ம்வகுப்பு வரை பங்குகொண்ட நாகமலை சிற்றுலாவினை நிதி அறங்காவலர் அன்பரசன், இயக்குநர் முத்துக்குமார், தொண்டர்கள் ரா.கார்த்திக், முருகபாண்டி, முனியசாமி ஆகியோர் பொறுப்பேற்றிருந்தனர்.

* புதுயுகம் ஆசிரியர் குழு மொழியியல் அறிஞர் திருமிகு. அண்ணாமலை மற்றும் திருமதி. அண்ணாமலை அவர்களை சந்தித்து மகிழ்ந்தனர்.

12.6.07 புதுயுகம் இதழுக்கான படைப்புகள் எழுதுதலில் வாண்டுகள், அரங்க மாணவ, மாணவியர் ஈடுபட்டிருந்தனர்.

13.6.07 வேர்கள் அரங்க மாணவர்கள் புதுயுகம் இதழுக்கான படைப்புகளை படைத்தனர்.

14.6.07 புதுயுகம் இதழில் பிரசுரிக்க வேண்டி கனவுகள் அரங்க மாணவர்கள் படைப்புகளை எழுதினர்.

15.6.07 12ஆம் வகுப்பு மாணவர் R.வினோத் தனது பிறந்தநாளை கனவுகள் அரங்க நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாடி மகிழ்ந்தார்.

16.6.07 வாண்டுகள், வேர்கள், அரங்க குழந்தைகள் பாட்டுக்குப் பாட்டு போட்டியில் பாடி மகிழ்ந்தனர். 11ம் வகுப்பு குழந்தைகளுக்கு பள்ளிச்சீருடை, சைக்கிள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் வழங்கப்பட்டன.

17.6.07 மதுரை அருகே உள்ள கடச்சனேந்தல் மீன் பண்ணைக்கு குழந்தைகள் சென்று வந்தனர். பல வண்ண மீன்களையும் அரிய மீன் வகைகளையும் குழந்தைகள் கண்டு ரசித்தனர். வாண்டுகள் அரங்க மீன்தொட்டிக்கு சில குழந்தைகள் மீன்களை வாங்கி பரிசளித்தனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த சிறுவர் பூங்காவில் விளையாடியும், செடி வகைகளையும் பார்த்து வியந்து மகிழ்ந்தனர். பின்பு அங்கு ஸ்பைருலினா கலந்து செய்யப்படும் பொறிமிட்டாய் தொழிலகத்தை பார்வையிட்டனர். பொறிமிட்டாய் செய்யப்படும் முறைகளை கேட்டும், நேரில் கண்டு விளக்கம் பெற்றனர். இந்நிகழ்விற்கு A.S.கார்த்திக்பாரதி மற்றும் முத்துக்குமார் ஆகியோர் பொறுப்பேற்றிருந்தனர். எல்லோருக்கும் பொறிமிட்டாய் வழங்கப்பட்டது.

18.6.07 பதினொன்றாம் வகுப்பு மாணவர்கள் புதிய பள்ளிகளுக்கு இன்று சென்றனர். சீடு டிரஸ்ட் 11ம் வகுப்பு குழந்தைகள் 7 பேர் மேல்நிலைக்கல்விகற்க சென்றனர்.

19.6.07 தேன்கூடு குழந்தைகள் வங்கி பற்றிய விளக்க கூட்டம் வாண்டுகள் அரங்க குழந்தைகளின் பெற்றோருக்கு நடைபெற்றது.

20.6.07 தேடல் இளைஞர் வங்கியின் ஜுன் மாதக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது.

21.6.07 தேன்கூடு குழந்தைகள் வங்கி பற்றிய விளக்க கூட்டம் வேர்கள் அரங்க குழந்தைகளின் பெற்றோருக்க நடைபெற்றது.

22.6.07 கனவுகள் அரங்க குழந்தைகளின் பெற்றோருக்கு தேன்கூடு குழந்தைகள் வங்கி பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

23.6.07 காலை வேர்கள், கனவுகள், அரங்க குழந்தைகள் மதுரை கூத்தியார்குண்டு Barle-G பிஸ்கட் பாக்டரிக்கு சென்று வந்தனர். பிஸ்கட் செய்யும்முறை, பேக்கிங், விற்பனை முறை, பார்லே-G வகை தயாரிப்புகள் இவற்றை பார்த்தும், கேட்டும் தெரிந்து கொண்டனர். Barle-G ன் வரலாறு மற்றும் செய்திபடத்தை ஒரு அழகியகருத்தரங்க அறையில கண்டு மகிழ்ந்தனர். மிகவும் நலிவுற்ற பகுதிகளைச் சேர்ந்த எம் குழந்தைகளுக்கு இந்நிகழ்வு பெரிய வரப்பிரசாதமாகும். பங்குகொண்ட குழந்தைகள் அனைவருக்கும் பார்லே-ஜி பிஸ்கெட்டுகள் பெற்று மகிழ்வுடன் வீடு திரும்பினர். இந்நிகழ்வை இயக்குநர் முத்துக்குமாரும், திருமிகு. கார்த்திக் பாரதியின் ஒருங்கிணைப்பினர்.

24.6.07 வாண்டுகள் அரங்கத்து குழந்தைகள் களிமண் பொம்மைகள் செய்வது பற்றி பயிற்சி பெற்றனர்.இதனை A.S.கார்த்திக் பாரதி அவர்கள் வழிநடத்தினார்.

வேர்கள் அரங்க குழந்தைகள் நடன பயிற்சி பெற்றனர். இந்நிகழ்வை தொண்டர்கள் முனியசாமி மற்றும் முருகபாண்டி வழிநடத்தினர்.

கனவுகள் அரங்கத்து குழந்தைகள் குழந்தைஉரிமை குறித்து பயிற்சி பெற்றனர். இந்நிகழ்வை முத்துக்குமார் அவர்கள் வழிநடத்தினார்.

25.6.07 Seed மாணவிகளில் முதன்முதலாய் முதுகலை வணிகவியல் படிக்கச் செல்லும் முதல் மாணவி மு.கயல்விழி.

Seed மாணவர்களின் முதன்முதலாய் முதுகலை படிக்கச் செல்லும் முதல் மாணவர் அன்பரசன் ஆகியோருக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

சீடு மாணவர்களின் முதன்முதலாய் தியாகராசர் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படிக்கச்செல்லும் தொண்டர் P.முனியசாமி அவர்களுக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

26.6.07 மதுரை மேற்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி Seed குழந்தைகள் பேரவை வாக்குரிமை விழிப்புணர்வு வாசகங்களை கரும்பலகைகளில் வெளியிடும் நிகழ்ச்சி நடந்தது.

27.6.07 Seed அறக்கட்டளை தொண்டர் முருகபாண்டி அமெரிக்கன் கல்லூரிக்கு படிக்க செல்வதையொட்டி அவருக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

28.6.07 சீடு தொண்டரும் கோவில்பட்டி அரசு சுகாதார நிலைய ஆற்றுப்படுத்துனருமான திருமிகு.கணேஷ்குமார் அவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற்றது.

29.6.07 டென்னிஸ் பயிற்றுநர் திருமிகு. ராஜா தனது பிறந்தநாளையொட்டி 150 சீடு டிரஸ்ட் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார்.

30.6.07 செந்தமிழ் நூலகத்தில் புத்தக வாசிப்பு வகுப்புகள் நடைபெற்றன.

பதிவுகள்
K.அன்பரசன்

## நன்றிகள்!

கரும்பாலை, P.T.காலனி, இந்திராநகர், SM.நகர் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளின் 11-ம் வகுப்பு சேர்க்கைக்கு சீடு டிரஸ்ட் மிகுந்த அக்கறை கொண்டு 3 மாணவிகள் மற்றும் 10 மாணவர்களின் பள்ளி சேர்க்கைக்கு சீடு அறக்கட்டளை தேவையான வழிகாட்டல்களையும், உதவிகளையும் செய்தது. மிகவும் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த நம் சீடு அறக்கட்டளை குழந்தைகளுக்கு தியாகராசர் மாதிரி மேல்நிலைப்பள்ளி, இளங்கோ மேல்நிலைப்பள்ளி, சேதுபதி மேல்நிலைப்பள்ளி, பாண்டித்துரை மேல்நிலைப்பள்ளி, OCPM மேல்நிலைப்பள்ளி, மீனாட்சி சுந்தரேசுவரர் மேல்நிலைப்பள்ளி மற்றும் A.C.மேல்நிலைப்பள்ளி போன்ற பள்ளிகளில் கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் கிடைத்துள்ளது என்பதை நன்றியுடன் நினைவு கூறுகிறோம்.

தங்கள் தலைமுறைகளில் முதன்முதலாய் கல்லூரி கல்வியை எட்டிய நம் சீடு டிரஸ்ட் இளைஞர்களுக்கு தியாகராசர் கல்லூரி, அமெரிக்கன் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு படிப்பதற்கான வாய்ப்புகள் கிடைத்துள்ளன என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- சீடு அறக்கட்டளை நிர்வாகம்.

*Publishers* **Mr. A.S. KarthikBharathi** **9894805446**
**Mr. K.P.Anbarasan**

*Honorary Editor* **Mr. S.Muthukumar** *Editor* **C.T.Premkumar**

*Editorial Board* **C.T.Arunkumar, C.K.Karbagajothi**

*Communication Address* **PUDHUYUGAM - MONTHLY, SEED TRUST**
**Arjun Shanmuga Illam, 439/1, East Street, Karumbalai, Madurai-20.**
**Ph :0452 - 6456503,** askb_seednarpanigal_2000@yahoo.com


ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ், 13, சு சு ரோடு, சி.எஸ்.ஐ. சர்ச் பின்புறம், மதுரை – 625 002. போன் : 3256908, 9865935571

# SEED TRUST - MADURAI


**வாண்டுகள் அரங்கம் ⋆ வேர்கள் அரங்கம் ⋆ கனவுகள் அரங்கம்**

**இனிய குழந்தைகள் உலகம் படைப்பதற்கான முயற்சி**


**நலிவுற்ற குழந்தைகளுக்கான முழுமைத்துவ கல்வி மையங்கள் – கரும்பாலை**



**K.**முத்துப்பாண்டி
11ஆம் வகுப்பு
கனவுகள் அரங்கம்




என். அனீஸ் பாத்திமா
10ஆம் வகுப்பு
கனவுகள் அரங்கம்




**M.**பிரதீப் ராஜா
9ஆம் வகுப்பு
கனவுகள் அரங்கம்



**R.**பூமா தேவி
2ஆம் வகுப்பு
வாண்டுகள்
அரங்கம்



**K.**ஆனந்த்குமார்
5ஆம் வகுப்பு
வேர்கள் அரங்கம்



**P.**விக்னேஷ்
10ஆம் வகுப்பு
கனவுகள் அரங்கம்